பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை-28

<u>சுற்றறிக்கை</u>

<u>எண்.44377/சி1/2016</u> <u>நாள் 08/12/2016</u>

பொருள் : ஆவணப்பதிவு - ஆவணங்களில் சாட்சிகளின் கூடுதல் விவரங்கள் சேர்த்தல் - தொடர்பாக.

பார்வை : தமிழ்நாடு தகவல் ஆணையம் வழக்கு எண். SA 4011/மாநில தமிழ்நாடு தகவல் ஆணையம்/2016, நாள் 07.09.2016.

*******

பார்வையில் காணும் தமிழ்நாடு தகவல் ஆணைய ஆணையில் மனுதாரரால், ஆவணம் போலியாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து பரிசீலிக்க ஆவணம் பதிவு செய்யப்படும் போது நேரில் இருந்த 2 சாட்சிகளின் பெயர்கள், அவர்கள் தந்தை பெயர் மற்றும் முகவரிகள் ஆகியன கோரப்பட்ட நிலையில் ஆவண நகலை பார்வையிட்ட போது அதிலுள்ள சாட்சிகள் பற்றி பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்கள் பதிவு செய்பவரை அடையாளம் காட்டும் வண்ணம் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை எனவும், சாட்சிகளின் அடையாளம் சரியாக உறுதி செய்யப்படாத நிலையில், அவர்களை வைத்து பதிவு செய்பவரின் அடையாளத்தை உறுதி செய்வது முறையற்றது என்வும் சாட்சிகளின் அடையாள அட்டை பெறப்பட வேண்டும் என்று வலியுறுத்துவது போலிப் பத்திரப்பதிவுகளை தடுக்க உதவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆள்மாறாட்டம் மற்றும் போலி ஆவணப்பதிவு தவிர்ப்பதற்கான நடைமுறை மாற்றங்களை புகுத்துவது குறித்து பதிவுத்துறைத்தலைவர் அவர்களை நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு தகவல் ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

பதிவு சட்டப்பிரிவு 2(1)ல்

**"addition"** means the place of residence, and the profession, trade, rank and titile (if any) of a person described, and, in the case of 3[an Indian] 4[****] his father's name, or where he is usually described as the son of his mother, then his mother's name;

மற்றும் பதிவு விதி 82(ii) & (iii)ல்

"(ii) The Executant and the witnesses may be required to write their additions themselves in the endorsements made on documents, when they are able to do so.

(iii) The name and addition of a party who is required to sign in the endorsements but who is not able to do so shall be written by the registering officer himself. Where the addition is entered by the party himself (clause (ii)) the registering officer shall satisfy himself that the addition as entered is complete and that it corresponds with the statement made by the party".

என குறிப்பிட்டுள்ளதற்கிணங்க சாட்சிகளின் பெயர், தந்தை பெயர் மற்றும் முகவரி ஆகிய கூடுதல் விவரங்கள் ஆவணங்களில் தெளிவாக எழுதப்பட வேண்டும் எனவும், அவற்றை உறுதி செய்து கொண்டு, சாட்சிகளின் அடையாள அட்டை பெற்று ஆவணத்துடன் ஒளிவருடல் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. புகாருக்கு இடமளிக்காது பதிவு அலுவலர்கள் செயல்பட வேண்டும் எனவும், இதனை மாவட்டப்பதிவாளர்கள் / துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள் தங்கள் ஆய்வின் போது கண்காணிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/- 08.12.2016
பதிவுத்துறைத்தலைவர்.

பதிவுத்துறைத்தலைவருக்காக.

8/12/2016

பெறுநர்

அனைத்து துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்,
அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்,
அனைத்து சார்பதிவாளர்கள்.